1992 மார்ச் 26]

திருமதி ரமணி நல்லதம்பி: இதுபற்றிக் கூறியிருக்கிறார்கள். ஆகவே அது குறித்த விவரங்களை கொஞ்சம் சிரத்தை எடுத்து செயலாற்றி அந்தத் திட்டத்தைச் செயற்படுத்தித்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிலம் ஏரிப் புறம்போக்கு என்று சொல்லவில்லை. ஓடைப்புறம்போக்கு நிலம்தான். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதைப்போன்று அங்கே ஆக்கிரமிப்பு ஏதும் இல்லை என்றுதான் அரசுக்குக் குறிப்பு வந்திருக்கிறது. ஒருவேளை அது எந்தப் பயனுக்கும் உபயோகப் படுத்தப்படாமல் இருக்கின்ற காரணத்தால் யாராவது இப்படி விவசாயம் செய்து கொண்டிருக்கிறார்களோ என்னவோ தெரியவில்லை ஆனால் குறிப்பிலே அங்கே எந்த ஆக்கிரமிப்பும் இல்லை என்று தான் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இந்த இடத்திலே கட்டுவதற்கான குறிப்பை ஆராய்ந்து நம்முடைய பிற்படுத்தப் பட்டோர் நலத் துறைக்கு அனுப்புவதாக அந்த மாவட்ட அலுவலர் தெரிவித்து இருக்கிறார். அப்படி வந்ததற்குப் பிறகு நிதி நிலையையொட்டி, நிச்சயமாக அது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் 9—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 360, திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

360—

தனியார் பொறியியல் கல்லூரி சேர்க்கையில் முறைகேடுகள்

*3797 திரு. கி. இராஜன் பாபு என்கிற தணிகை பாபு:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தனியார் துறையிலுள்ள பொறியியல் கல்லூரி மற்றும் தொழில்நுட்ப நிலையங்களில் மாணவர் சேர்க்கையில் முறைகேடுகள் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அவற்றைக் களைந்திட அரசு ஆவன செய்யுமா?

[1992 மார்ச் 26

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) மற்றும் (ஆ) : ஒரு சில சுயநிதி பொறியியல் கல்லூரி மற்றும் பாலிடெக்னிக்குகள், சேர்க்கைகளில் தவறு செய்துள்ளதாகப் புகார்கள் வந்து, விசாரிக்கப்பட்டு நிர்வாகங்கள் எச்சரிக்கப்பட்டுள்ளன.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தக்கலை என்ற இடத்தில் இருக்கின்ற நூருல் இஸ்லாம் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு பொறியியல் படிக்கின்ற சுரேஷ் என்கின்ற மாணவன் ஊனமுற்றோர் கோட்டாவில் அங்கே இடத்தைப் பெற்று ஆஸ்த்மா நோயினால் பீடிக்கப்பட்டு இன்றைய தினம் அந்த மாணவன் பெற்றோருடைய பாதுகாப்போடு இருக்க வேண்டும் என்பதால் அவன், பெற்றோர்கள் இருக்கின்ற இடத்திலே இருந்தால்தான் அவனுடைய மருத்துவ சிகிச்சைக்கு வாய்ப்பாகவும், ஏதுவாகவும், இருக்கும் என்கிற மருத்துவர்களின் அறிவுரைப்படி—அந்த மாணவனுக்கு சென்னையிலே இருக்கின்ற எம். ஜி. ஆர். பொறியியல் கல்லூரியிலே இடம் தருவதற்கு ஆவன செய்யப்படுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு, மூலக் கேள்வி, தனியார் துறை பொறியியல் கல்லூரியில் மாணவர் சேர்க்கையில் முறைகேடு உள்ளதா என்பது பற்றியது.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முறைகேடுகளைத்தான் சொல்லிக் கொண்டு இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முறைகேடுகள் இருக்கின்றனவா என்பதைப் பற்றிக் கேட்டுவிட்டு, தனிப்பட்ட ஒரு மாணவனை, அங்கே இருக்கின்ற மாணவனை மாற்றி, இங்கே சேர்ப்பீர்களா என்று கேட்பது எப்படி இதிலே துணைக் கேள்வியாகும்.

திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கல்லூரிக்கு அந்த மாணவனுடைய பெற்றோர்கள் சென்றால் அவர்களை மிரட்டி அனுப்பி இருக்கிறார்கள். அதேபோன்று என்னுடைய தொகுதியிலேகூட, ஒரு தனியார் கல்லூரியில், அதாவது தொடுகாடு என்று அழைக்கப்படுகின்ற இடத்தில் உள்ள ஐ.டி.ஐ-யிலே ஒரு மாணவனைச் சேர்ப்பதற்காகச் சென்று இருக்கிறார்கள். ஐந்து ஆயிரம் ரூபாய் கேட்டு இருக்கிறார்கள். 4,500 ரூபாய் கொடுத்து இருக்கிறார்கள். 500 ரூபாய் தரவில்லை என்பதற்காக அந்த மாணவனை வெளியேற்றி இருக்கிறார்கள். எனவே

1992 மார்ச் 26]

அந்த மாணவன் விரக்தியின் எல்லைக்கே சென்று, தற்கொலை செய்து கொள்கின்ற அளவிற்கு அவன் தூக்கு போட்டுக் கொண்டு இருக்கிறான். மருத்துவ சிகிச்சைக்குப் பிறகு அவனுடைய உடல் நலம் தேறி இன்றையதினம் இருந்து கொண்டு இருக்கிறான். இதைப்போன்ற முறைகேடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. எனவே நமது புனித தெய்வமான தமிழகத்தினுடைய நிரந்தர முதல்வர், புனிதத் தாய், டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் இந்தக் குறை களைக் களைவதற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமகனார் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதிக் கல்லூரியில் மட்டு மல்ல, வேறு எந்தக் கல்லூரியாக இருந்தாலும், பாலிடெக்னிக்காக இருந்தாலும், பள்ளிக்கூடமாக இருந்தாலும், எந்தக் கல்வி நிறுவனமாக இருந்தாலும், முறைகேடுகள், தவறுகள் என்று இருக்கிறபொழுது அதைத் திருத்துவதற்கும், அவ்வா லாமல் செய்வதற்கும்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் என்னை அமைச்சர் பொறுப்பிலே வைத்தி கள். ஆகவே, குறிப்பிட்ட கல்லூரியிலே ஏதாவது தவறுகள் இருக்குமேயானால், அதை எங்களது கவனத்திற்குக் கொண்டு வந்தால், அந்தத் தவறை திருத்துவதற்கான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்வோம். மாண்புமிகு உறுப்பினர், குறிப் பிட்ட ஒரு மாணவன், குறிப்பிட்ட ஒரு கல்லூரியிலிருந்து, சென்னையிலே இருக்கிற ஒரு குறிப்பிட்ட கல்லூரியில் சேர்வ தற்கான ஒரு கோரிக்கையைத்தான் இங்கே மன்றத்திலே வைத்து இருக்கின்றார்கள். பொதுவாக, சுயநிதிக் கல்லூரி களிலே சொல்லப்படுகின்ற பல்வகை முறைகேடுகளில் இதுவும் ஒன்று. அரசின் அனுமதியில்லாமல் ஒரு கல்லூரியிலிருந்து இன்னொரு கல்லூரியிலே சேருவதற்கு, அவர்கள் அனுமதி தருகிறார்கள் என்பதுதான் ஒரு முறைகேடாகச் சொல்லப் படுகிறது. அப்படிப்பட்ட நிலையில், இது ஒரு முறைகேடாக இல்லாமல், ஒரு மாணவனுக்குச் செய்கின்ற ஒரு நியாயமான உதவியாக இருக்குமேயானால் அதைக் குறித்து அரசு தக்க நடவடிக்கை எடுக்கும். மற்றபடி ஐ. டி. ஐ., என்பது கல்வித் துறையின் கீழ் வராது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுயநிதி பெற்று பொறியியல் கல்லூரி நடத்தக்கூடிய கல்லூரிகள் மாணவர்களிடத்தில் தங்கள் இஷ்டம்போல் பணங்களைப் பெற்று, அவர்களைச் சேர்க்கின்ற ஒரு தன்மை இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு முன்வருமா? அதே போன்று, அதிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு

1992 மார்ச் 26]

அரசு ஊழியர்களுக்கு வழங்குகின்ற, அரசு ஊழியர்களாக பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு வழங்குவதுபோன்ற அடிப்படையான சம்பளத்தை, தனியார் கல்லூரிகளிலே பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு அரசு ஏதாவது ஒரு சட்டத்தைக் கொண்டு வர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்கல்வி பெறுகின்ற மாணவர்கள், அந்தக் கல்விச் செலவுக்கான அந்தத் தொகையினை அவர்களே பகிர்ந்து கொள்கின்ற ஒரு முறையைதான் இப்போது தேசியக் கல்விக் கொள்கை அங்கீகரிக்கிறது ஏழை எளிய மாணவர்களுக்கு வேண்டுமானால் அரசு தான் அந்தச் செலவை ஏற்றுக் கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அந்த முறையில் ஒரு சுய நிதிக் கல்லூரியோ அல்லது சுய நிதி பாலிடெக்னிக்கோ நடத்துவதற்கு என்ன செலவாகும் என்பதைப் பார்த்து, அதிலே சேர்ந்து படிக்கின்ற மாணவர்கள் அந்தச் செலவைப் பகிர்ந்து கொள்கிற அளவிற்கு ஒரு முறையை வகுப்பதற்காகப் பல்கலைக் கழக மானியக் குழு, அகில இந்திய தொழில் நுட்பக் கழகம், மத்திய அரசு, மாநில அரசு போன்றவைகள் கருத்தைச் செலுத்தி ஆராய்ந்து வருகின்றன. அப்பொழுது ஒரு நல்ல முறையை வகுக்க முடியும் என்று நான் நம்புகிறேன். அதுவரைக்கும் அதிகத் தொகைகளை வாங்கி மாணவர்களைச் சேர்க்கின்ற முறையைக் கட்டுப்படுத்துகின்ற முயற்சியிலே அரசு ஈடுபடும். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், அரசாங்கக் கல்லூரிகளிலே அல்லது அங்கீகரிக்கப்பட்ட கல்லூரிகளிலே என்ன சம்பளம் தரப்படுகிறதோ அதே சம்பளம்தான் இந்தச் சுய நிதிக் கல்லூரியிலும் தர வேண்டும் என்று அரசு விரும்புகிறது. அதையும் அமல்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு எடுக்கும்.

முற்பகல் 9—55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 361, திரு. கே. முனிவெங்கடப்பன்—மாண்புமிகு கல்வி அமைச்சர்.

361—

நூலகங்களில் " நமது எம்.ஜி.ஆர். " நாளிதழ்.

* 9375 திரு. கே. முனிவெங்கடப்பன் :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பொது மக்கள் விரும்பிப் படிக்கும் " நமது எம்.ஜி.ஆர். " நாளிதழ் எல்லா நூலகங்களிலும் கிடைக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் கிடைக்கும்?

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS